## சென்னை மெட்ரோ பயணிகளின்

# பயண நேரத்தை குறைக்கும் வகையில் 7 நிமிடத்திற்கு ஒரு ரயில்!

## அமலுக்கு வந்தது புதிய நடைமுறை!

சென்னை, நவ. 28 -

சென்னை மெட்ரோ பயணிகளின் பயண நேரத்தை குறைக்கும் வகையில் நெரிசல் மிகு நேரம் இல்லாத (Non Peak Hours) மற்ற நேரங்களில், 7 நிமிடத்திற்கு ஒரு ரயில் என்ற புதிய நடைமுறை நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது. சென்னையில் மெட்ரோ ரயிலுக்கான வரவேற்பு தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் சென்னை மெட்ரோ பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதே சமயம் மெட்ரோ ரயில் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டும் மற்றும் அவர்களின் காத்திருப்பு நேரத்தை குறைப்பதற்காகவும் புதிய நடைமுறை ஒன்று அமலாக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இரண்டு வழித்தடங்களிலும் நெரிசல் மிகு நேரங்கள் இல்லாது மற்ற நேரங்களில் 9 நிமிட இடைவெளியில் இயக்கப்பட்டு வரும் மெட்ரோ ரயில் சேவைகள் நேற்று முதல் 7 நிமிட இடைவெளியில் இயக்கப்படுகின்றன.

மக்கள் அதிகம் பயன்படுத்தும் நெரிசல் மிகு நேரங்களான காலை 8 மணி முதல் 11 மணி வரையும், அதேபோல மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை 3 மற்றும் 6 நிமிடத்திற்கு ஒரு ரயில் என இரு பிரிவுகளில் ரயில்கள் இயக்கப்பட்டு வருகிறது. அதே போல், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் அடித்தள நாளை முன்னிட்டு டிசம்பர் 3ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் மட்டும் ரூ.5 கட்டணத்தில் பொது மக்கள் பயணிக்கலாம் என சென்னை மெட்ரோ அறிவித்துள்ளது. பேடிஎம், வாட்ஸ் ஆப், ஃபோன் பே, ஸ்டடிக் கியூ ஆர் போன்ற டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மூலம் பதிவு செய்யும் டிக்கெட்டுகளுக்கு மட்டும் இந்த வசதி பொருந்தும்.

## உத்தராகண்ட் சுரங்கப் பாதை:

# 41 பேரை மீட்க களமிறங்கியது ராணுவம்!

டேராடூன், நவ. 28 –

உத்தராகண்ட் சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் பணியில் ராணுவம் களமிறங்கி உள்ளது. அப்பகுதியில், பக்கவாட்டில் துளையிட்ட ஆகர் இயந்திரம் பழுதடைந்ததால், செங்குத்தாக துளையிடும் பணி தொடங்கி உள்ளது.

உத்தராகண்டில் சில்க்யாரா பர்கோட் இடையே அமைக்கப்படும் சுரங்கப் பாதையில் கடந்த 12 ம்தேதி மண் சரிவு ஏற்பட்டது. இதில்,41 தொழிலாளர்கள் சுரங்கப் பாதைக்குள் சிக்கிக்கொண்டனர். அவர்களை மீட்பதற்காக, அமெரிக்க தயாரிப்பான ஆகர் இயந்திரம் மூலம் பக்கவாட்டில் துளையிடப்பட்டது. ஆனால், அந்த இயந்திரத்தின் பிளேடு, கம்பிகளில் சிக்கி உடைந்து சுரங்கப் பாதையில் சிக்கிக் கொண்டது. இதனால், அந்த இயந்திரத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து, பக்கவாட்டில் துளையிடும் முயற்சி கைவிடப்பட்டது.

அதற்கு பதிலாக, சுரங்கத்தின் மேல் பகுதியில் இருந்து செங்குத்தாக துளையிட்டு, தொழிலாளர்களை மீட்க திட்டமிடப்பட்டது. செங்குத்தாக துளையிடும் பணி நேற்று முன்தினம் மதியம் தொடங்கியது.

**25 டன் இயந்திரம்:** இதற்கிடையே, பழுதடைந்த 25 டன் எடை கொண்ட ஆகர் இயந்திரத்தை பிளாஸ்மா இயந்திரம் மூலம் வெட்டி வெளியே இழுக்கும் பணி நடந்து வருகிறது. இந்தபணி முடிந்ததும், ஏற்கெனவே பக்கவாட்டில் 47 மீட்டர் தூரம்துளையிடப்பட்டு குழாய் பொருத்தப்பட்டுள்ள பகுதியில், இயந்திரங்களை பயன்படுத்தாமல், ஒவ்வொருவராக ஆட்களை அனுப்பி துளையிட முடிவு செய்யப்பட்டுள்ளது.இந்த பணியில் ராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இதற்காக மெட்ராஸ் சாப்பர்ஸ், ராணுவ பொறியாளர் படையை சேர்ந்த பொறியாளர் குழு சம்பவ இடத்துக்கு நேற்று முன்தினம் வந்துள்ளது. உள்ளே சிக்கிய தொழிலாளர்களை சென்றடைய இன்னும் 15 மீட்டர்தூரம் துளையிட வேண்டும்.

மீட்பு பணியை விரைவுபடுத்தும் வகையில், ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (டிஆர்டிஓ) உபகரணங்களுடன் விமானப் படை வீரர்களும் வந்துள்ளனர்.

**'நீண்ட நாட்கள் ஆகும்':** தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர் லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு) சையது அடா ஹஸ்னைன் கூறும்போது, "தொழிலாளர்களை மீட்கும் நடவடிக்கை முடிவதற்கு நீண்ட நாட்கள் ஆகும். மலைப் பகுதி என்பதால் எதையும் முன்கூட்டி கணிக்க முடியாது. காலக்கெடுவை நாங்கள் ஒருபோதும் கூறவில்லை. செங்குத்தாக துளையிடும் பணி தொடங்கி உள்ளது. 86 மீட்டர் ஆழத்தில் சுரங்கப் பாதை உள்ளநிலையில், இதுவரை 15 மீட்டர் ஆழத்துக்கு செங்குத்தாக துளையிடப்பட்டுள்ளது என்றார்.

**தொழிலாளர்களை மீட்க 6 திட்டங்கள்:** தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பு மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குநர் மஹ்மூத் அகமது கூறும்போது, "செங்குத்தாக துளையிடும் பணி திட்டமிட்டபடி நடந்தால், தொழிலாளர்கள் 4 நாட்களில் மீட்கப்படுவார்கள். ஏற்கெனவே பக்கவாட்டில் துளையிட்ட பகுதியில் ஆட்களை கொண்டு தோண்ட திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு மொத்தம் 6 திட்டங்கள் உள்ளன. இதுகுறித்து பரிசீலித்து வருகிறோம்" என்றார்.

சுரங்கத்தில் 41 தொழிலாளர்களும் கடந்த 360 மணி நேரத்துக்கு மேலாக (15 நாட்கள்) சிக்கி உள்ளனர். அவர்களுக்கு ஆக்சிஜன், ஒளி, உணவு, குடிநீர், மருந்துகள் உள்ளிட்டவை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என அதிகாரிகள் கூறினர். தொழிலாளர்கள் மீட்கப்பட்டதும் உடனே மருத்துவமனைக்கு அழைத்து செல்ல, சுரங்கப் பாதைக்கு வெளியே41 ஆம்புலன்ஸ்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.



திருப்புவனம் ஒன்றிய பகுதியில் தட்டான்குளம், பசியாபுரம், கீழடி, கொந்தகை, பாட்டம், புலியூர், சாயனாபுரம், சொட்ட தட்டி ஆகிய கிராமங்களில் வாக்காளர் சேர்த்தல் நீக்கல் சிறப்பு முகாமை மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் வசந்தி சேங்கைமாறன் தலைமையில் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர். திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் சேங்கைமாறன் பார்வையிட்டார். இதில் நாகூர்கனி, ஈஸ்வரன், சுப்பையா, ராமு. வைத்தீஸ்வரி ஆறுமுகம், தேவதாஸ், ரகமத்துல்லாகான், மகேந்திரன், தேளிகோபால், கழுங்கு பட்டி முருகன், சங்கர், அண்ணாமலை, பாண்டிய கிருஷ்ணன், பாலகிருஷ்ணன், அர்ஜுனன், ரமேஷ், ஆறுமுகம், சுரேஷ், பாலமுருகன், ஜோதிமணி, சுப்பிரமணியன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## சிவகங்கை மாவட்டத்தில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட்டம்!

சிவகங்கை. நவ. 28-

சிவகங்கை மாவட்ட அளவில் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் சிறப்பாக கொண்டாடப் பட்டது .மாவட்ட அளவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்வழங்கியும், முதியோர் இல்லங்களில் அன்னதானங் கள் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டது.

சிவகங்கை நகர்கழகம் மற்றும் இளைஞரணி சார்பில் வந்தவாசி ரோட்டில் உள்ள தாய் மாற்றுத்திறனாளிகள் இல்லத்தில் காலை அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகர்மன்ற தலைவரும் நகர்கழக செயலாளருமான சி.எம்.துரை ஆனந்த் தலைமையில் மாவட்ட துணை செயலாளர் செயலாளர் கே. எஸ். எம். மணிமுத்து முன்னிலையில் உணவுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன் மதியழகன், இளைஞரணி அரிகரன், பிரபாகரன், அருள், மகேஸ்வரன், வட்டச் செயலாளர்கள் ஆர்.சி. சேகர், ரமேஷ், நிர்வாகிகள் சேது, முருகேசன், மாற்றுத்திறனாளிகள், சங்க மாநில தலைவர் புஷ்பராஜ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். முன்னதாக அரசு போக்குவரத்துக் கழக கிளை அலுவலகம் முன்பாக கழக கொடியினை துரைஆனந்த் ஏற்றி வைத்தார் அங்கு பொது மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

### காரைக்குடி

காரைக்குடி நகர்கழகத்தின் சார்பில் அங்குள்ள முதியோர் இல்லத்தில் நகர் கழக செயலாளர் என். குணசேகரன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் முதியோர்களுக்கு இனிப்புடன் காலை உணவு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் சுப்பையா, சண்முகம், சேவியர் ,மகளிரணி லட்சுமி உட்பட நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். முன்னதாக நகரில் பல்வேறு இடங்களில் கொடியேற்றப் பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டது.

### சிவகங்கை

சிவகங்கை தெற்கு ஒன்றியம் சார்பில் முத்துப்பட்டி நம்பிக்கை மன வளர்ச்சி குன்றியோர் மையத்தில் மதிய உணவினை சிவகங்கை தெற்கு ஒன்றிய செயலாளர் எம். ஜெயராமன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், மகளிரணி துணை அமைப்பாளர் மார்கரெட்கமலா நிர்வாகிகள் பொன்னம்பலம் காளிதாஸ் இளைஞரணி செல்வம் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். முன்னதாக தெற்கு ஒன்றிய அலுவலகமான அறிவாலயத்தில் ஒன்றியசெயலாளர் எம்.ஜெயராமன்கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். காளையார் கோவில். காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர் வே. ஆரோக்கிய சாமி தலைமையில் காளையார்கோவிலில் ரத்ததான முகாம், மரக்கன்று நடுதல், இளைஞர்களுக்கு நீட் எதிர்ப்பு தெரிவித்து கையெழுத்து இயக்கம் ,மற்றும் இனிப்புகள் வழங்கி கொண்டாடப் பட்டது.இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### மரவமங்கலம்

காளையார் கோவில் தெற்கு ஒன்றியகழகத் தின் சார்பில் மறவமங்கலத்தில். பஸ்நிலையம் முன்பாக கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது. ஒன்றிய செயலாளர் யோக. கிருஷ்ணகுமார் தலைமையில் இளைஞரணி சரவணன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### இளையான்குடி

இளையான்குடி வடக்கு ஒன்றியம் மற்றும் இளையான்குடி பேரூர் கழகத்தின் சார்பில் கண்மாய் கரையில் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. அங்குள்ள பள்ளி மாணவர்களுக்கு நோட்டுகள் வழங்கப்பட்டது.தாயமங்கலத் தில் மதிய உணவு வழங்கப்பட்டது.வடக்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ.சுப.மதியரசன் தலைமையில் இளையான்குடி பேரூர் கழக செயலாளரும், பேரூராட்சி தலைவருமானபி.ஏ. நஜ்முதீன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் துணைத் தலைவர் இப்ராகிம், விவசாய அணி பா.காளிமுத்து, இளைஞர் அணி பைரோஸ்கான், தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன், கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன்,மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் புலிக்குட்டி பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் தவுலத்,ரகூப்,பல்த்தசார் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மானாமதுரை.

மானாமதுரை நகர் மற்றும் மேற்கு ஒன்றியம் சார்பில் நகர்கழக செயலாளர் க.பொன்னுச் சாமி தலைமையில் ஒன்றிய செயலாளர் எம்.அண்ணாதுரை முன்னிலையில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு கழக கொடி ஏற்றி முதியோர்களுக்கு இனிப்புகளும் ,மதியஉணவும் வழங்கப்பட்டது. கழக அரசின் இரண்டரை ஆண்டு சாதனைப் பட்டியல் வீடுவீடாக சென்று வழங்கப்பட்டது . இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற துணைத்தலை வர் பாலா சுந்தர், ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, துணைத் தலை வர் முத்துச்சாமி, நிர்வாகிகள் ரவிச்சந்திரன், பாஸ்கரன், மூர்த்தி, இளைஞரணி கார்த்தி மற்றும் ஒன்றிய நகர்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# தஞ்சையில் ரூ.27.13 கோடி மதிப்பில் தொழில்நுட்ப பூங்கா!

## அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா நேரில் ஆய்வு!

தஞ்சாவூர், நவ. 28 -

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம் மேலவஸ்தாச்சாவடி அருகில் டைட்டல் பார்க் அமைப்பதற்கான கட்டுமான பணிகள் நடைபெறுவதை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக்ஜேக்கப் முன்னிலையில் தமிழ்நாடு டைட்டல் பார்க் மேலாண்மை இயக்குனர் ஜெயசந்திரபானு ரெட்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன், டி. கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

3.40 ஏக்கர் பரப்பளவில்; 55,000 சதுர அடியில் ரூ 27.13 கோடி மதிப்பில் 4 அடுக்கு மாடி கட்டிடமாக இந்த டைட்டல் பார்க் கட்டுமானப் பணிகள் நடைபெறுவதை பார்வையிட்ட தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா இப்பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது வருவாய் கோட்டாட்சியர் இலக்கியா, செயற்பொறியாளர் பாலாஜி, து.செல்வம், டி.அருளானந்த சாமி, வட்டாட்சியர் அருள் ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கத்தார் நாட்டில் பயிலும்

# தமிழ்நாட்டு மாணவர்களுக்கு - தமிழ் பாடப் புத்தகங்கள் தட்டுப்பாடு!

## நா.சதக்கத்துல்லா உள்ளிட்டோரிடம் மனுவினைப் பெற்று - விரைவில் தீர்த்து வைப்பதாக - பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி உறுதி!

தோகா, நவ. 28 -

கத்தார் வருகை புரிந்திருந்த தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனியிடம் கத்தார் அயல் தி.மு.க. பொறுப்பாளர் நா.சதக்கத்துலலா மற்றும் நிர்வாகிகள் சார்பில் புத்தகம் வேண்டி கடிதம் கொடுக்கப்பட்டது.

கத்தாரில் படிக்கும் தமிழ்நாடு மாணவர்களுக்கு தமிழ் புத்தகம் கிடைப்பதில் தட்டுப்பாடு இருப்பதை பெற்றோர்கள் கத்தார் அயலக திமுக நிர்வாகிகளிடம் தெரிவித்தனர். அதன் அடிப்படையில் அங்கு வருகை புரிந்த தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனியிடம் கத்தார் அயலக தி.மு.க. சார்பில் புத்தகம் வேண்டி கோரிக்கை வைக்கப்பட்டது.

கடிதத்தை படித்துவிட்டு உடனடியாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியிடம் ஆலோசித்து பற்றாக்குறையை உடனடியாக தீர்த்து வைப்பதாக உறுதி அளித்தார்.

இதன் அடிப்படையில் வரும் கல்வியாண்டு முதல் கத்தார் அயலக தி.மு.க. மூலமாக பள்ளி மாணவர்களுக்கு தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்கும்.

இந்த நிகழ்வின் போது கத்தார் அயலக தி.மு.க. பொறுப்பாளர் நா.சதக்கத்துல்லா, அப்துல் ரஷீத், யாழினி குமார், பாலாஜி, மதன்குமார் விவேக் சத்தியராஜ் ஒருங்கிணைநத தமிழர் பேரவை நிர்வாகிகள் வலியுல்லா இப்ராஹிம் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில் - திருவொற்றியூர்

# 14 (அ) வட்டத்தில் வாக்காளர் சேர்ப்பு முகாம்!

## ஏகா. கார்த்திகேயன் முன்னிலை!

சென்னை, நவ.28-

தலைமைக் கழக உத்தரவுப்படியும், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே. பி.சங்கர் ஆலோசனைப் படியும், சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி 14வது 'அ' வட்டத்தில் திருத்தங்கல் நாடார் மேல்நிலைப்பள்ளி மற்றும் சி.எஸ்.ஐ. செயின்ட் ஆரம்பப் பள்ளி ஆகிய பள்ளிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்குதல் பணிகள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன் தலைமையில் 14வது 'அ 'வட்டச் செயலாளரும், சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளருமான ஏகா.கார்த்திகேயன் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட கழகப் பிரதிநிதிகள் எம்.எத்திராஜ் என்கிற குட்டி, ஆர்.அப்துல் சலீம், வி.இமயவர்மன், வட்ட அவைத் தலைவர், வட்ட பிரதிநிதி ஆர்.டைலர் பாபு, வட்ட துணைச் செயலாளர், ஞா.ஜார்ஜ், எஸ். மைக்கேல், எஸ்.தேன்மொழி மற்றும் பாக முகவர்கள் நேவிராஜ், எஸ். கோபி, வினோலியா, எஸ்.பந்தய சேகர், ஆர். தனபால், ஏ.சபா, கே.சண்முகம், எம். சுரேஷ், வி.விமல் உள்ளிட்டோர் வாக்காளர் முகாம் சரிப்பார்க்கும் பணியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திருவொற்றியூர் கிழக்கு பகுதிக் கழகம் சார்பில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

## தி.மு.தனியரசு நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, நவ.28 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் மாநில இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் வார்டு 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 14அ ஆகிய வட்டங்களில் நடைபெற்ற வாக்காளர் சரிபார்த்தல் சிறப்பு முகாமில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பாக முகவர்கள், பாகநிலை முகவர்கள் BLA 2 & BLC கலந்து கொண்டு புதிய வாக்காளர் சேர்த்தல், முகவரி மாற்றம், பெயர் திருத்தம் செய்தல் போன்ற பணிகளை திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஆய்வு மேற்கொண்டார்.

இதில் வீ.கவி கணேசன், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஏ.ராஜ், பி.சாந்தி, பகுதி துணை செயலாளர்கள் எம்.வி.குமார், ஆர்.எஸ். சம்பத், கே.பிரபாவதி, ஆர். குமரேசன், வட்ட செயலாளர்கள் த.கார்த்திகேயன், எம்.எல்.சரவணன், டி.சி. வி.மணிகண்டன், எஸ். தமிழ்செல்வன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம். ராஜா, ஆர்.சந்தர், ஏகா. கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பாஸ்கர், ஒய்.ரஜினிநந்தி, ஆர்.ரஜினி பாபு, வி.பழனிவேல், டி.டி. எம்.பாபு, பி.எஸ்.சைலஸ், ம.ஜெயராமன், ம.எத்திராஜ், கே.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் கலந்து கொண்டு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் ஈடுபட்டனர்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் கிழக்கு ஒன்றியம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு காளையார் கோவிலில் ரத்த தானமுகாம் ஒன்றியச் செயலாளர் எல்லாளன் வே.ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்றது.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி கட்சி அலுவலகத்தில் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் வழிகாட்டுதலின்படி பேரூர் கழக நிர்வாகிகளுக்கு புதிய உறுப்பினர் அடையாள அட்டையை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகாராஜன்சேது ராஜா. வழங்கினார் .உடன் பேரூர் செயலாளர் சரவணன்..மாவட்ட தெற்குமாவட்டமாணவரணி அமைப்பாளர் பிரகாஷ்.கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.